செய்தி வெளியீடு எண்: 723 நாள்:25.10.2019

<u>செய்தி வெளியீடு</u>

# தமிழ்நாடு நாட்டுப்புறக்கலைஞர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் உயர்வு

நமது பாரம்பரியமிக்க நாட்டுப்புறக் கலைகளின் பல்வேறு கலை வடிவங்களை மதிப்புணர்ந்து அவற்றை முன்னெடுத்து செல்லவும், நாட்டுப்புறக் கலைஞர்களின் சமூக பாதுகாப்பிற்காகவும், நலத்திட்ட உதவிகள் வழங்கிடவும், தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் கலை பண்பாட்டுத் துறையின் கீழ் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. 18 வயது முதல் 60 வயதுக்குட்பட்ட கலைஞர்கள் இவ்வாரியத்தில் உறுப்பினர்களாக சேர்க்கப்படுகிறார்கள்.

காஞ்சிபுரம், சேலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் செயல்படும் மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் மூலமாக, சென்னை தவிர்த்து இதர மாவட்டங்களைச் சேர்ந்த கலைஞர்கள் தங்கள் மாவட்டத்திற்கான மண்டல மையங்கள் மூலமாகவும், சென்னையைச் சேர்ந்த கலைஞர்கள் எழும்பூரில் உள்ள கலை பண்பாட்டு இயக்ககத்தில் உள்ள நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரிய அலுவலகம் மூலமாக உறுப்பினர்கள் பதிவுகள் மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாரியத்தில் தமிழ்நாட்டில் இதுவரை 33575 நாட்டுப்புறக் கலைஞர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளார்கள். இவ்வாரியத்தின் உறுப்பினர்களுக்கு ரூ.1,39,41,132/– மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

வம்சாவழியாக தொடர்ந்து மண்ணின் கலைகளை பரப்பி வரும் பிறவிக் கலைஞர்களான கிராமிய / நாட்டுப்புறக் கலைஞர்கள் தங்களது வறுமையின் காரணமாக பராம்பரிய நாட்டுப்புறக் கலைகளை வருங்கால சந்ததியினருக்கு கற்றுக் கொடுக்க முடியாமல் போவதற்கான வாய்ப்புகளை முற்றிலும் அகற்றி தமிழ் பண்பாட்டினையும், கலாச்சாரத்தினையும் மீட்டெடுக்க கிராமிய /நாட்டுப்புறக் கலைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டியது அவசியமாகிறது. நாகரீக வளர்ச்சியாலும், நவீன ஊடகங்களின் வரவாலும் பாதிக்கப்பட்டுள்ள தமிழகத்தின் பாரம்பரியக் கலைகளை மீட்டெடுப்பது மற்றும் அக்கலைகளில் ஈடுப்பட்டுள்ள கலைஞர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திடுவது மிகவும் அவசியமாகிறது.

அவ்வகையில் அமைப்பு சாரா தொழிலாளர்கள் நலவாரியத்தில் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் அனைத்தும் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தில் பதிவுபெற்றுள்ள உறுப்பினர்களுக்கு கூடுதலாக்கப்பட்ட நிதியுதவிகளுடன் வழங்கப்படுவதற்கான அரசாணை 17.09.2019 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்க;ள ஒப்புதலுடன் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணையின்படி, நாட்டுப்புறக் கலைஞர்களின் வாரிசுகளில் பெண்களின் கல்வித் தரத்தினை உயர்த்துவதற்காக (இரு வாரிசுகளுக்கு) 10ஆம் வகுப்பு / 11ஆம் வகுப்பு பயிலும் மகளுக்கு ரூ.1,000/–, 12ஆம் வகுப்பு பயிலும் மகளுக்கு ரூ.1,500/– வழங்கப்படும். கலைஞர்களின் இருவாரிசுகளுக்கு இருபாலார்களிலும் முறையான பட்டப்படிப்பு பயில்பவர்களுக்கு ரூ.1,500/– ஆண்டொன்றுக்கு வழங்கப்படும்.

விடுதியில் தங்கி பட்டப்படிப்பு பயில்பவர்களுக்கு ரூ.1,750/–, முறையான முதுகலை பட்டப்பபடிப்பு பயில்பவர்களுக்கு ரூ.4,000/–, விடுதியில் தங்கி முதுகலை பட்டப்படிப்பு பயில்பவர்களுக்கு ரூ.5,000/–, தொழில்நுட்ப பட்டப்படிப்பு பயில்பவர்களுக்கு ரூ.4,000/– விடுதியில் தங்கி தொழில்நுட்ப படிப்புகள் பயில்பவர்களுக்கும், முதுகலை தொழிற் படிப்புகள் பயில்பவர்களுக்கும் ரூ.6,000/–, விடுதியில் தங்கி முதுகலை தொழிற்படிப்புகள் பயில்பவர்களுக்கு ரூ.8,000/–, தொழில்நுட்பப் பயிலகப் படிப்பு (பாலிடெக்னிக்), தொழிற்பயிலகப் படிப்பு (ஐ.டி.ஐ) பயில்பவர்களுக்கு ரூ.1,000/– விடுதியில் தங்கி தொழில்நுட்பப் பயிலகம் மற்றும் தொழிற்பயிலகம் பயில்பவர்களுக்கு ரூ.1,200/– ஆண்டொன்றுக்கு வழங்கப்படும்.

திருமண நிதியுதவியாக (இருமுறை மட்டும்) உறுப்பினர் / மகன் / மகள் ஆகியோருக்கு ரூ.5,000/– வழங்கப்படும். பெண் உறுப்பினர்களின் மகப்பேறு நிதியுதவி ரூ.6,000/– கருச்சிதைவு / கருக்கலைப்பு நிதியுதவி (இருமுறை மட்டும்) ரூ.3,000/– வழங்கப்படும். நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு மூக்குக்கண்ணாடி வாங்குவதற்கான உதவித்தொகை மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை ரூ.1,500/–, இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை ரூ.20,000/–, ஈமச்சடங்கிற்கான உதவித்தொகை ரூ.5,000/–, விபத்து மரண உதவித்தொகை ரூ.1,00,000/– என நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும்.

நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரிய உறுப்பினர்கள் இந்நலத்திட்ட உதவிகள் பெறுவதற்காக, தங்கள் உறுப்பினர் பதிவினை புதுப்பித்துக் கொள்ளவும், இதுவரை உறுப்பினர்களாக பதிவு செய்யாத கலைஞர்கள் புதிதாக பதிவு செய்து கொள்ளவும், சம்மந்தப்பட்ட மண்டலக் கலை பண்பாட்டு மையங்களின் உதவி இயக்குநர் அலுவலகங்களை தொடர்பு கொள்ளலாம் என மாண்புமிகு தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்கள் அறிவித்துள்ளார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**